
உ

சிவசக்திமயம்

# ஸ்ரீ நகுலாம்பிகை
# அருட்ஜோதி மலர்



நகுலேஸ்வரஸ்வாமி கண்டகி தீர்த்தம்

294.5514
ஸ்ரீ நகு

கீரிமலை - நகுலேஸ்வர ஆதீன வெளியீடு — 1969

உ
சிவசக்திமயம்

# ஸ்ரீ நகுலாம்பிகை

# அருட்ஜோதி மலர்

*

உலகிலா ருயிர்க ளெல்லாம் உளமகிழ் பூத்து வாழ
நிலவிய செல்வம் நல்கி நெஞ்சினிற் கவலை மாற்றி
நலமிகு சுகபோ கங்கள் நாடொறும் அருளா லீந்து
தலமெலாம் புரக்கு மன்னை தனலட்சுமி சரணம் போற்றி.

*

கீரிமலை நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரசுவாமி கோயில்
அஷ்டோத்தர சகஸ்ர ஜோதிர் மண்டல
சங்காபிஷேக வைபவத்தை முன்னிட்டு
வெளியிடப்படுகிறது.

1969

294.5514

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY
215
JAFFNA

சுன்னாகம், திருமகள் அழுத்தகம்

உ
சிவமயம்

# முன்னுரை

நகுலாம்பிகாதேவி அருட்ஜோதி மலர் என்னும் இந்நூலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா அவர்கள் பதிப்பித்து வெளியிட்டதின் பயன் கணக்கிலடங்காதது.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் சக்தி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் புவனேஸ்வரி அஷ்ட இலக்குமிகளாகப் பரிணமித்து மக்களுக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தருகின்றார் என்பதைக் காட்டும் திரு உருவப் படங்கள் முதற்கண் அமைந்துள்ளமை சிறப்பாகும்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் யாத்த தோத்திரத்தில், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தரும்படி ஜோதிநாயகியாகிய நகுலாம்பிகாதேவியை வேண்டியுள்ளார்.

சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகம் முதன்முறையாக ஈழத்தின் தலைசிறந்த க்ஷேத்திரமாகிய நகுலேஸ்வர ஆலயத்தில் நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்தமையால், இத்தலத்தின் வரலாற்றுப் பெருமை இந்நூலில் இடம்பெறவேண்டியது அவசியமே. பலநூற் பிரமாணங்களுடன் இக் கட்டுரை அமைந்திருக்கின்றது.

ஜோதி வடிவில் அம்பிகையைப் பூசிக்கின்ற மரபையும், அதனால் ஆன்மாக்களுக்கு விளையும் நற்பயன்களையும் சோதி என்னும் தலைப்பில் திரு. வி. சங்கரப்பிள்ளை அவர்கள் வர்ணித்துள்ளார்.

வீர இலக்குமி, விஜய இலக்குமி ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களை பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்களும், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் இந் நூலில் தந்துள்ளார்கள். வீரம், விஜயம் ஆகியன மானுடருக்கு இன்றியமையாத செல்வங்கள் என்பதனைத் திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், நீதிநூல்கள் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டி இருவரும் சிறப்புக்கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

இலக்குமி என்பதன் பொருளையும், எங்கு அவள் வசிப்பாள், எங்கு நுழையவும் மாட்டாள் என்பதையும் சாஸ்திரோக்தமாக, வேதாகம பூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இலக்குமிதேவியின் கிருபாகடாக்ஷத்தை வேண்டிநிற்கும் அன்பர்கள் தாம் எப்படி வாழவேண்டும், தாம் வாழும் இல்லங்களை எப்படிப் பேணவேண்டும் என்ற அறிவுரைகள் நிறைந்தது இவர்தம் கட்டுரை.

சைவ உயர்பீடத் தலைவர் பிரம்மஸ்ரீ ச. குமாரஸ்வாமிக் குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்கியதன்படி நகுலேஸ்வரத்தில் நிகழும் சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகம் அடியார்களின் இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் தரும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அம்பிகை அருட்ஜோதி மலரில் நிறைந்து சிந்தும் தேனினுமினிய தத்துவக் கருத்துக்கள், காற்றோடு பரவும் நறுமணம்போல எத்திசையிலும் பரவிப் பக்தியை ஊட்டுவதாக.

சுபம்.

மாவிட்டபுரம். து. சுந்தரமூர்த்தி ஐயர்

EV-LYN RUT INSTITUTE
REFER E
LIBRARY
JAF

உ

சிவமயம்

# நன்றியுரை

நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமியின் திருவருட் செறிவினாலே, அம்பாளுக்கு சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகம் செய்ய முற்பட்டுள்ளோம். வைதீகமும் ஆகமமும் இணைந்த வழிபாட்டு முறையை நாம் இந்த அபிஷேக ஆராதனையில் கைக்கொண்டுள்ளோம். தேவியைத் தீப ஜோதிகளில் ஆவாகித்து, ஜோதியிலிருந்து சங்குதீர்த்தத்தில் ஒடுக்கிப் பின் சங்கு தீர்த்தத்தினால் அம்பாளை அபிஷேகிப்பதே முக்கிய அம்சமாக விளங்குகிறது.

தனம், தான்யம், வீரம், விஜயம், சந்தானம், ஞானம், ஐஸ்வர்யம், ராஜ்யம் ஆகிய எட்டு சம்பத்துக்களும் உலகில் நிலைபெற்று விளங்குவதற்காக, உலகமாதாவாகிய புவனேஸ்வரி அஷ்ட இலட்சுமிகளாக விளங்குகிறாள். அங்ஙனமாக அருள் பாலிக்கும் நகுலாம்பிகையை வழிபட்டு உலகக்ஷேமத்திற்காகக் கருணை புரியவேண்டுமென்று பிரார்த்திக்கும் வண்ணம் சகஸ்ர ஜோதி வழிபாட்டை நடாத்துகின்றோம். குருவாரமும், பூரணையும், சித்திரை மாதமும் ஒருங்கே அமையப்பெற்று விளங்கும் இச் சுபவேளையில் அம்பிகை வழிபாடு நடாத்துவது சாஸ்திரோக்தமானது. முதல் முறையாக இந்த விசேஷ ஆராதனை நடத்த முயற்சிக்கும்போது சாஸ்திரோக்தமான சுபவேளை அமையப்பெற்றது எம்பெருமானின் பெருங்கருணைப் பேராற்றுப் பெருக்கினாலாகும்.

சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகம் மங்களகரமாக நிறைவேறத் துணை நின்ற எம்பெருமானைத் துதித்து; மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் உதவி புரிந்த அந்தணப் பெருமக்களுக்கும், அலங்கார மண்டபம் அமைக்கவும், தீபம், அபிஷேகத் திரவியங்கள் முதலியன தந்தும் உதவிய சைவ அடியார்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியும் வாழ்த்துக்களும் உரியதாகுக. நகுலேஸ்வர கண்டகி தீர்த்தக் கட்டிலிருந்து தூய அபிஷேக தீர்த்தம் எடுப்பதற்கு ஆகவேண்டிய பாதுகாப்பையும் ஒழுங்கு முறைகளையும் கைக்கொண்ட தெல்லிப்பழை கிராமசபைத் தலைவரையும் அங்கத்தவர்களையும் ஆசீர்வதிக்கின்றோம்.

இந்த க்ஷேத்திரத்தின் புனித வரலாற்றையும், ஜோதி வழிபாடு, அஷ்டலக்குமியின் மகிமை, தேவி உபாசனை, தேவி தோத்திரப் பாமாலை, ஆசியுரை முதலியவற்றையும் மலரில் வெளிப்படுத்தும் வண்ணம் தயாரித்துத் தந்த பெரியார்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றி உரியதாகுக.

இச் சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகத்தின் மூலம் இங்கு நடைபெறும் செய்தியை மக்களுக்கு அறியத்தந்தும், அதன் தத்துவார்த்தங்களை வெளிப்படுத்தும் இம்மலரைத் தயார்செய்து தந்தும் உதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தாருக்கும் எமது நன்றியையும் ஆசியையும் நல்குகின்றோம்.

வருடந்தோறும் சிறப்பாக இந்த வைபவம் நடைபெற அம்பிகையின் கருணையை வேண்டுகின்றோம்.

சுபம்

கீரிமலை
1-5-69

நகுலேஸ்வரா ஆதீனகர்த்தா



ஞானலட்சுமி



கஜலட்சுமி



தைர்யலட்சுமி



சந்தானலட்சுமி



விஜயலட்சுமி



தானியலட்சுமி



தனலட்சுமி



வீரலட்சுமி

உ
சிவமயம்

# ஸ்ரீ நகுலாம்பிகாதேவி தோத்திரம்

புண்ணியந டம்பரவு தண்ணருட் சத்திபரி
பூரணி பவானி ஜனனி
பூதமைந் தாகிவரு முயிராகி யண்டங்கள்
பூத்தருளும் புவநேஸ் வரி
எண்ணெண் கலைக்கிறைவி இகபர மிசைந்த*தந
இன்ப*தா நிய *தைரிய
ஏத்து*சௌ ரிய,*வித்தி யா,*விஜய *கீர்த்தியொ(டு)
*இராச்சியலட் சுமிஎண் மரும்
பண்ணமைய நின்றுபணி கொண்டன்பு பாலிக்கப்
பரமநகு லேஸ்வர னிடப்
பாகத் தமர்ந்துசிவ ஜோதிநா யகியாகிப்
பயிலரசு புரியுந் தாயே,
நண்ணுநின தன்புசுக செல்வமுயர் நிறைவாழ்வு
நம்மவர்க் கீந்தருளு வாய்
நலமேவு கீரிமலைத் தலமேவு பேரழக
நகுலாம் பிகா தேவியே.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

* அஷ்டலட்சுமிகள்

உ

சிவமயம்

# ஆசியுரை

மகாமேரு மலைச்சாரலிலே சுதர்மமுனிவ ரென்பவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அங்கே ஒரு வேடன் ஒரு மரத்திலேறி நித்திரை செய்தான். அவனுடைய வாயிலுள்ள நீர்த்துளியானது முனிவருடைய முகத்தில் விழுந்தது.

சுதர்ம முனிவர் வேடனை நோக்கி, கோபித்து ''உனக்குக் கீரிமுக முண்டாகுக'' என்று சாபமிட்டார். உடனே அவனுக்குக் கீரிமுகமுண்டாயது. வேடன், ''முனிசிரேட்டரே, நான் அறியாது செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும்'' என்று சொல்லி அவருடைய பாதங்களை வணங்கினான். முனிவர், ''வேடனே! நீ பயப்படாதே. இலங்கைத் தீவிலே சமுத்திரக் கரையிலே, *நகுலம் என்னும் தலமிருக்கிறது. அங்கே போய், சிவபெருமானை வணங்கி, விரும்பிய வரங்களைப் பெற்றுக்கொள்ளுதி'' என்றார். வேடன் வணங்கித் தவஞ்செய்யுமாறு புறப்பட்டான்.

அவன் வேதாரண்யத்தை அடைந்து அங்கேயிருந்து மரக்கலமேறி, நகுலம் என்னுந் தலத்தை அடைந்தான். தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, பல வருஷங்களாகப் பூசை, செபம் முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தான்.

சிவபெருமான் அவனுடைய முன்னிலையிலே தோன்றினார். அவன் நிலத்திலே விழுந்து வணங்கினான். சிவபெருமான் அவனை ''நகுல முனிவனே'' என்று அழைத்தார். உடனே அந்த முனிவர் கீரிமுகம் நீங்கி அழகிய மனித முகத்தைப் பெற்றார். சிவபெருமான், ''இன்று முதலாக இந்த மலை நகுலமலையென்னும் பெயரைப் பொருந்துக. நீ அன்புடன் பூசித்தமையால் அடியார்கள் எம்மை நகுலேசர் என்று அழைப்பார்கள். நீ இங்கேயிருந்து எம்மைப் பூசித்து முத்தியடைவாய்'' என்று கூறி மறைந்தருளினார். நகுலமுனிவர் அங்கேயிருந்து சிவபெருமானை வழிபட்டு முத்தியடைந்தார். (நகுலமலை — கீரிமலை) என்று 'தக்ஷிண கைலாச புராண'த்தில் விதந்தெடுத்துக் கூறப்பட்டதும், மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூன்று மொருங்கே யமையப் பெற்றதும், நகுலமுனிவர் முத்தியடைந்த தலமுமாகிய நகுலேசுரத்தில்

* (நகுலம் = ந + குலம், குலமில்லாத மலை எனப் பொருள்படும்.)

எழுந்தருளியிருக்கும் நகுலேசுரப் பெருமானுக்கு அட்டோத்தர சத சங்கா பிஷேகமும், நகுலாம்பிகாதேவிக்கு சோதிர் மண்டல சகஸ்ர சங்காபிஷேக மும், அட்டலட்சுமி பூசையும் கோயில் ஆதீனகருத்தர் பிரமஸ்ரீ. கு. நகுலேசுவரக்குருக்களது தளரா ஊக்கத்தினுல் சைவாபிமானிகளும் சேர்ந்து நிகழும் சௌமிய வருஷம் சித்திரை மாதம் 19ஆந் திகதி (1-5-69) வியாழக் கிழமை சித்திராபூரணையிலன்று செய்வதற்கு நிச்சயித்துள்ளார்கள்.

கடவுளுக்குச் சங்காபிஷேகம் செய்பவர்கள் பெறும் பயன் யாதெனில், கூறுதும்: பூரண ஆயுள், செல்வம், அவமிருத்துஜயம், வியாதி நீக்கம், பகை நீக்கம், தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நால்வகைப் புருஷார்த்தம், புத்திர பௌத்திர விருத்தி, ஆணவமல நீக்கம் என்ப வற்றுள் அவ்வவ் அடியார்கள் விரும்பிய விரும்பிய பலனைப் பெறுவார்கள் என்று 'அம்சுமான்' என்னும் சிவாகமம் செப்புகின்றது. இந்தச் சகஸ்ர சங்காபிஷேகத்தைச் சித்திரா பூரணையிலன்று நடாத்தி வைக்கும் குருக்க ளவர்களுக்கு மெய்ஞ்ஞானமும், ஐசுவரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும் மேன்மேலு முண்டாகத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

இவ்வபிஷேகத்திற் பங்குபற்றிய சிவனடியார் அனைவர்க்கும் எல்லா நன்மைகளுமுண்டாக ஆசீர்வதிக்கின்றோம்.

**ச. குமாரசுவாமிக் குருக்கள்**
*சைவ உயர்பீடத் தலைவர்*

உ
சிவமயம்

# கீரிமலை நகுலேஸ்வர ஆலய வரலாறு

ஆ. சிவநேசச்செல்வன்

கங்கையொடு திங்களராக் காட்டுஞ் சடைமுடியார்
மங்கைநகு லாம்பிகையை வைத்தவிடப் — பங்குடையார்
கீரிமலை வாசர் கிளருநகு லேசரடி
வாரிசத்திற் கன்புசெய்கு வாம்.

ஈழத்திலேயுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவும் புராண பாரம்பரியங்களைக் கொண்டனவுமாகிய தலங்களுள் கீரிமலை நகுலேஸ்வர திருத்தலமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் புராதனத்தை நிர்ணயிக்கும் புறச்சான்றுகள் எவையும் இன்று இல்லை. இவை யாவும் அன்னியர் ஆட்சி காரணமாகச் சிதைவுபட்டுப் போயின. இன்றைய ஆலய அமைப்பும் மற்றும் சின்னங்களும் ஆங்கிலேய ஆட்சிக்குப் பிந்தியன எனலாம். எனினும் அகச்சான்றுகளாக வரலாற்று ஏடுகளில் உள்ள செய்திகளும் புராண மரபும் மற்றும் பிற்கால நூற் செய்திகளும் அமைந்துள்ளன. இக் கட்டுரைக்கு ஆதாரமாகக் 'கைலாய மாலை', 'யாழ்ப்பாண வைபவம்', ம. க. வேற்பிள்ளையால் எழுதப்பட்ட 'ஈழ மண்டல சதகம்', அப்பாசாமி ஐயர் அவர்களால் எழுதப்பட்ட 'நகுலகிரிப் புராணம்', 'யாழ்ப்பாணச் சரித்திரம்' ஆதியன அமைந்துள்ளன.

## விஜயனும் நாற்பெருங் கோவில்களும்

வரலாற்று ஏடுகளில் முக்கியமான 'யாழ்ப்பாணவைபவம்' கீரிமலை வரலாற்றை விஜய மன்னனுடன் தொடர்புபடுத்துகின்றது. கீரிமலையின் வரலாற்று மரபு விஜயன் வருகையுடன் ஆரம்பமாகின்றது. "கீழ்த் திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை நிறுத்தி மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேதீச்சரச் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலை எழுப்பி வடதிசைக்குக் கீரிமலைச் சாரலிலே திருத்தம்பலை என்னும் பதியிலே திருத்தம்பலேச்சுரன் திருத்தம்பலேஸ்வரி கோவில்களையும் கட்டுவித்து ..................." என 'யாழ்ப்பாண வைபவ மாலை'யில் வரும் செய்தி வரலாற்றுப் புராதனத்தை நினைவுறுத்துகின்றது. 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவருக்கு ஆதாரமாக விருந்த நூல்கள் எவை எனத் தெரியவில்லை. 'கைலாயமாலை', 'வையாபாடல்' செய்திகளுடன் புராணமரபும் கர்ண பரம்பரையான செய்திகளும் துணையாக விளங்கின எனலாம். "திருத்தம்பலேச்சுவரன் கோவிலையும் அதன் அண்மையில் உள்ள கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்த விஜயன் அவ்வாலயங்களுக்குப் பூசனை நிகழ்த்தும்படி காசிப் பிராமணராகிய நீலகண்டாசாரியரின் மூன்றாவது குமாரன் வாமதேவாசாரியரையும் அவர் பத்தினியாகிய விசாலாட்சி

அம்மையாரையும் நியமித்தான்'' எனவும் கூறப்பட்டிருக்கின்றது. கோவில் தோன்றிய காரணத்தினுலே இவ்விடம் கோவிற்கடவை எனப் பெயர்பெற்றது. மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை என்று இன்று வழங்கும் பகுதி முழுவதும் கோவிற் கடவை என்ற பெருங் குறிச்சியாக வழங்கியது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நகுலமுனிவரும் கீரிமலையும்

நகுலமுனிவருக்கும் கீரிமலைக்கும் உள்ள தொடர்பு விஜயன் காலத்துடன் இணைந்ததாக 'யாழ்ப்பாண வைபவமாலை'யிற் கூறப்படுகிறது. புராண வரலாற்றுடன் இணைந்த நகுலமுனிவரின் பூர்வம், மகா பாரதம் அஸ்வமேத பர்வனியிற் காணப்படுகின்றது. பிருகுமுனிவரின் சாபத்தால் ஜமதக்கினி முனிவரே நகுலமுனிவர் ஆயினர். ஜமதக்கினி தனது தந்தையின் சிரார்த்தத்தைச் செய்வதற்குத் தமது குலகுருவாகிய பிருகுமுனிவரை ஒருகால் அழைத்தார். சிரார்த்த தினத்தன்று எதிர் பாராதவிதமாக வியாசமுனிவரும் வந்திருந்தார். வியாசரும் உயர் குருவாக இருந்தமையினுல் இருவரில் எவரைச் சிரார்த்த குருவாக ஏற்பது என்று கவலை கொண்டு மனங் குழம்பினுர். நாழிகையும் கழிய சிரார்த்த வைபவமும் தாமதம் அடைந்தது. இதன் விபரத்தைப் பிருகுமுனிவர் கீரிவடிவங்கொண்டு, ஜமதக்கினியின் மனை சென்று அறிந்தார். கோபங் கொண்ட பிருகுமுனிவர் உணவுப் பதார்த்தங்களை எச்சிற்படுத்தி அலங் கோலஞ் செய்தார். பிதிர்களும் கோபங்கொண்டு ஜமதக்கினியைக் குலமற்றுப் போகும்படி சபித்தன. இதனுல் மனங்கவன்ற ஜமதக்கினி, பிருகு முனிவரை அடைய அவர் கோபங்கொண்டு ''கீரிமுகம் உடைய வனுய் அலைவாய்'' எனச் சபித்தார். ஜமதக்கினி தன் நிலையை விபரமாகக் கூறி மீண்டும் இரந்ததன் பயனுகப் பிருகுமுனி சாபவிமோசனம் அளித்தார். ''இலங்கையின் வடபாலுள்ள திருத்தம்பலேச்சுரத்தின் அருகே உள்ள கற்பாறையிலிருந்து பெருக்கெடுத்தோடிச் சங்கமமாகும் அந்த வாவியில் மூழ்கின் விமோசனம் அடையலாம்'' என அருளினுர். அவ்வண்ணமே ஜமதக்கினி சாபம் நீங்கினுர். புராண மரபின்படி கூறப்படும் இச் சாபவிமோசனக் கதை மரபு 'யாழ்ப்பாண வைபவமாலை'யிற் காணப்படவில்லை. 'யாழ்ப்பாண வைபவமாலை'யில், ''இங்குள்ள மலைச் சாரலிலே ஓரிருடி தங்கியிருந்து தீர்த்தமாடித் தமக்கேற்பட்ட அங்கவீனம் நீங்கிப் போனது கண்டு அத் தல விசேடத்தையும் தீர்த்த மகிமையையும் குறித்து மலைமுளைஞ்சிலே வாசஞ் செய்துகொண்டிருந்தார்'' என்று கூறப்படுகின்றது. விஜயன் சிவாலயம் கட்டுவித்த பின்னர் நகுலமுனி அவ்வாலயங்களிலே தங்கி வழிபாடு நடாத்திவந்தார். இதன் காரணமாகக் கோவிலை நகுலேச்சுரம் எனவும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை நகுலேச்சுரன் நகுலாம்பிகை எனவும் வழங்கி வந்தனர். நகுலகிரி, நகுலாசலம் எனும் சிறப்புப் பெயர்களும் இவ்விடத்திற்கு வழங்கின.

தொடர்ந்து விஜயன் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் நகுலேசர் கோவிலைத் தரிசித்து நகுல

முனிவர் ஆசியும் பெற்றுன். மாருதப்புரவீக வல்லியின் வருகையுடன் இணைத்து நகுலேச்சுரத்தின் புராதனம் 'யாழ்ப்பாண வைபவமாலை' யிற் கூறப்படுகிறது. குன்மநோயும், குஷ்டமும், குதிரைமுகத்தையொத்த முகத்தையுங் கொண்ட இளவரசி சாந்தலிங்க முனிவரின் ஆலோசனையுடன் வளவர்கோன் பள்ளத்திற்றங்கி விரதம் அனுட்டிக்கும்போது நகுலமுனிவரைச் சந்தித்துத் தன் துன்பத்தைக் கூறினுள். நகுலமுனிவர் மாருதப்புரவீகவல்லியை ஆசீர்வதித்துத் தலவிசேடத்தையும் தீர்த்த விசேடத்தையும் உரைத்தார் எனக் கூறப்படுகிறது.

### நகுலமுனிவரும் மாருதப்புரவீகவல்லியும்

'யாழ்ப்பாண வைபவமாலை' ஏட்டுப்பிரதிகள் சிலவற்றில் நகுல முனிவாயிலாக மாருதப்புரவீகவல்லி தலவிசேடமும் தீர்த்த மகிமையும் உணர்ந்தமை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 'உதயதாரகை' என வெளிவந்த பிரதியிலும் திரிகோணமலை தி. த. கனகசுந்தரம் பிள்ளையின் பிரதியிலும் இச்செய்திகாணப்படுகின்றது. முதலியார் குல. சபாநாதன் இதனை அடிக்குறிப்பாகக் குறிப்பிடுவதைக் காணலாம் இக்கதை மரபுபலபுராண ரீதியான சம்பவங்களை நகுலேஸ்வர வரலாற்றுடன் தொடர்பு படுத்துகின்றது. கிரேதா யுகத்திலே முசுகுந்தச் சக்கரவர்த்தியுடன் தான் வந்து நீராடியமையையும் அத்தீர்த்தத்திற்குக் 'கண்டகி' தீர்த்தமெனப் பெயர் இருந்தமையையும் குறிப்பிடுகிருர். இத்தீர்த்தம் பார்வதி தேவி நீராடுவதற்காக பரமேஸ்வர மூர்த்தி இம் மலைச்சாரலில் எழுந்தருளி இருந்தபோது அழைத்து வைத்ததெனவும் கூறப்படுகிறது. இஃதன்றியும் முருகப் பெருமான் சூரசங்காரம் செய்யக் கதிரமலைக்குச் செல்லும் வழியில் நகுலகிரியிலே தங்கி இருந்தார். அவர் தங்கி இருந்த இடத்திலேயே கலிகாலத்தில் விசய ராசனுல் கதிரை ஆண்டவர் கோயில் அமைக்கப்பட்டதென்றும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் கீரிமலை, காந்தருவ நகரெனவும் வீணுகானபுரம் எனவும் அழைக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. ''இரண்டாம் யுகத்திலே இராவணன் தானொருவனேயன்றி வேறொருவரும் இராவண வீணையைத் தொடவும் படாதென்று உறுதியான கட்டளை பண்ணியிருந்த பொழுது சித்திராங்கன் என்னும் ஒரு கந்தருவன் தானும் அவ்வீணையை வாசிக்க நெடுங்காலம் பேராசை கொண்டிருந்தவன், தசரத இராமனுல் அவ்விராவணனுடைய இருபது கைகளும் அறுந்து விழுந்த சமயத்திலே அவ்வீணையைக் கவர்ந்து கொண்டு கீரிமலையில் வந்திறங்கி அவ்வியாழைப் பிரபலப்படுத்தினுன். இக் கதைமரபு கீரிமலையின் பழமையைச் சுட்டுகின்றது. இராமாயணக் கதையுடன் கீரிமலை வரலாறு இணைவதையும் காணலாம்.

### நளமகாராசனும் நகுலாசலமும்

மூன்ரும் யுகத்திலே நிடதநாட்டிலிருந்து அரசுபுரிந்த நளன் எனும் சூரிய குலத்தரசன் சூதாடி அரசிழந்து வனவாசம் செய்து திரிந்த போது தனக்கேற்பட்ட கலியை நீக்கத் தலயாத்திரை செய்து வருநாளில்

கோணேசர் தலத்திற்கு வந்தான். அங்குள்ளோர் சொற்படி நகுலாசலத்திற்கு வந்து கலியிடர் நீங்கினுன். நகுலேசர் பிரசன்னமாகி அவனை நோக்கி அருள் செய்து மறைந்தார். தான் அணிந்திருந்த சர்ப்பத்தையும் அக்கினியையும் நோக்கிக் கலியிடரை நீக்கிவரும்படி இறைவன் பணித்தார். இவ்வண்ணமே நான் செல்லும் பாதையில் அக்கினி யெரிய சர்ப்பம் அதனுள் விழுந்து வருந்துகின்ற பாவனையிற் துடிக்க அதனைக் கண்டு நளன் சுவாலையினின்று விலக்கி விட்டான். விலக்கிவிட்டவுடன் அச் சர்ப்பம் சினந்து பாய்ந்து அவனைக் கடித்தது. அப்பொழுது அவன் தேகம் முழுவதும் குட்டை பிடித்தது; அவனழகு கெட்டது. இதனுல் நளன் மனம் கவன்று வருந்தும்பொழுது சர்ப்பம் பிராமணவுருக் கொண்டு "நான் நகுலேசர் அணிந்திருக்கும் சர்ப்பாபரணம்; நகுலேசர் நீ செய்த வழிபாடு கண்டிரங்கிக் 'கலியின் குறை நீக்கி வாருங்கள் எனப் பணித்தார்' எனக் கூறிய பின்னர் அவ்வுரு மாறும் வகையினையும் சில காலத்திற் கலி நீங்கும்" எனவும் கூறி சர்ப்பமும் அக்கினியும் நகுலேசர் சமூகத்தை அடைந்தன. இக்கதை மரபு நள வெண்பாவிற் காணப்படாதது. மேலும் நகுலகிரிப் புராணத்திலும் நளன் யாத்திரை குறிப்பிடப்படுகின்றதே யொழிய இவ்வாறு கதை மரபு கூறப்படவில்லை. இப்புராண மரபுக் கதையும் நகுலமுனிவரால் மாருதப்புரவீக வல்லிக்குக் கூறப்பட்டதாக அமைகின்றது. இக்கதை மரபு 'தட்சணகைலாய மான்மிய'த்திலும் காணப்படுகின்றது.

மேலும் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தக்கால் தென்றிசையை நோக்கி வரும்போது இங்குள்ள கண்டகி தீர்த்தத்திலாடி நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் அருள்பெற்று ஏகினுன் என்ற செய்தியும் தொடர்பாக அமைகிறது. மேற்குறிப்பிட்ட கதை மரபுகளைக் கூறி நகுலமுனி மாருதப்புரவீகவல்லியை வழிப்படுத்தியதாக அமைகிறது.

**திருத்தம்பலேச்சுரமும்**
**போர்த்துக்கேயர் காலமும்**

யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றின் பின்னைய செய்திகளுடன், இணைந்த பகுதியில் கீரிமலை திருத்தம்பலேச்சுரம் பற்றிய விசேட செய்திகள் அதிகம் காணப்படவில்லை. 'யாழ்ப்பாண வைபவ மாலை'யிலும் 'யாழ்ப்பாணச் சரித்திர'த்திலும் கோவிலை மன்னர் ஆதரித்த செய்திகள் உள. போர்த்துக்கேயர் சிவாலயங்களை இடித்துச் செல்வங்களைக் கவர்ந்ததுடன் தமது கோட்டைகளைக் கட்ட அக் கற்களைப் பயன்படுத்திஞர்கள். பறங்கிகள் ஆலயங்களை இடிக்கப்போகின்ருர்கள் என்ற செய்தியை முன்னருணர்ந்த பூசகர்கள் விக்கிரகங்களையெல்லாம் மண்ணுல் தூர்த்துவிட்டு அவ்விடங்களை விட்டு அகன்றனர். பரராசசிங்கன் என்ற மன்னன் இறக்கும் வரையில் பறங்கிகள் அவன் பொருட்டாகக் கீரிமலையிலிருந்த திருத்தம்பலேஸ்வரன் கோவிலையும் நல்லூர்க் கந்தசாமி கோவிலையும் இடிக்காது விட்டிருந்தார்கள். அவன் இறந்தவுடன் அவைகளையும் இடித்தொழித்தார்கள். அவர்கள் இடிக்குமுன்னர் அக்கோயிற்குருக்களாகிய 'பரசுபாணி

ஐயர் ' கீரிமலையில் இருந்த விக்கிரகங்களை அக்கோயிற் கிணற்றிலிட்டு மண்ணுற் தூர்த்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினர். இப்பிராமணுேத்தமரது சந்ததியார் இன்றும் உளர். இக்காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை கோவில் செவ்வனே அமைக்கப்பட முயற்சிகள் நடந்தும் அக்கால அரசியல்நிலை இடமளிக்கவில்லை.

நாவலர் காலமும் ஆலய அமைப்பும்

சென்ற நூற்ருண்டின் இறுதிப் பகுதியிலே யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் புராதன ஆலயங்களின் புனருத்தாரணத்தைத் தமது பல்வேறு சமயப் பணிகளிடையே நினைவுறுத்தி வந்தார்கள். ஏறக்குறைய 1880ஆம் ஆண்டு வரையில் மாவிட்டபுரத்திலே இருந்த பிரசித்திபெற்ற ஆதி சைவராகிய சபாபதி தேசிகருடைய மரபிற் பிறந்த சற்குண சம்பன்னராகிய ஸ்ரீலஸ்ரீ காத்திகேயக் குருக்களும் புத்திரரிருவரும் ஆலயமமைக்கும் பணியினை ஆரம்பித்து வைத்தனர். புத்திரர்களாகிய பிரம்மஸ்ரீ சபாபதிக் குருக்கள், தியாகராஜாக் குருக்கள் என்போர் தமது உடல் பொருள் ஆவி அத்தனையையுமே கோவிலின் எழுச்சியை வேண்டி அர்ப்பணித்தனர். ஆரம்பத்திலே தம்பொருள் கொண்டு அதற்குரிய நிலம் வாங்கிக் கட்டிடவேலையை ஆரம்பித்து வைத்தார்கள். விடா முயற்சியும் அயரா உழைப்பும் கொண்டு திருவருள் வழிநின்று உழைத்ததன் பயனுக விக்கிரம வருடத்திலே ஆரம்பித்த திருப்பணி மன்மத வருடத்திலே ஓரளவு நிறைவேறியது சமஸ்கிருதம் தமிழ் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்ற அதிவிற்பன்னர்களாகிய பிராமணுேத்தமர்கள் இருவரும் மூலஸ்தானம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், பிரகாரம் ஆதியனவற்றை வேதாகம விதிப்படி நிருமாணிப்பித்தனர். நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளினுல் அம் மன்மதவருடம் ஆனி மாதம் (1895) அட்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேக விஞ்ஞாபனத்திலே, நகுலேஸ்வரத்தில் எழுந்தருளிய நாயகன் பெயரும் நாயகி பெயரும் சொல்லப்படுகின்றன.

' மறையொலி முழக்கம் எழுகடல் முழக்கம்
வட்கிட வோங்குநா குலத்தில்
கறையறு செம்பொன் திரித்துவிட் டனைய
கதிர்சடைப் பிரான்நகு லேசன்
நிறைமணங் கான்றுக டைகுழன் றிருண்டு
நெரித்துநெய்த் தமைந்துதண் ணென்று
நறுமலர்ப் பிணையல் சுமந்தொளிர் கூந்தல்
நாயகி திருப்பெயர் நகுலை '

நித்திய பூசைகள் செவ்வனே நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள். பொருள் கொண்டோர் உதவி கொண்டும், வேண்டியவிடத்துத் தம் பொருள் கொண்டும் சிறப்பாக அமைக்கப்பட்டன. பழைய திருத்தம்பலேச்சுரம் அமைந்த இடத்திலேயன்றித் தாம் பொருள் கொண்டு பெற்ற நிலத்திலே புதிய ஆலயம் அழகுற அமைக்கப்பட்டது குறிப்பிடவேண்டிய தொன்ருகும்.

பிரமஸ்ரீ தியாகராஜாக் குருக்களின் குமாரராகிய குமாரசாமிக் குருக்கள் தந்தையார் பணியைத் தொடர்ந்து ஆலயத்தின் அமைப்பினை மேலும் விஸ்தரித்தார். சமஸ்கிருதம்,

தமிழ்மொழி, ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் அதிவிற்பன்னராகிய குருக்களவர்களின் காலத்திலே புனருத்தாரண வேலைகள் அதிகம் நடைபெற்றன. பொதுமக்கள் ஆதர வும் குருக்களவர்களுக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

முன்னோர் அடிச்சுவட்டின் வழி யொழுகும் இன்றைய ஆதீனகர்த்தர் பிரமஸ்ரீ தி. கு. நகுலேஸ்வரக் குருக்கள் ஆலயத்தின் உயர்வு வேண்டிப் பல்வேறு துறைகளிலும் உழைத்து வருகிறார்கள். தம்மா லியன்றளவு திருப்பணி வேலைகளைத் தம் பொருள் கொண்டும் உபகாரிகள் பொருள் கொண்டும் இயற்றி வருகின் றார்கள். நித்திய நைமித்தியங்கள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. குருக்களவர்களின் பெருமுயற்சியால் இற்றைக்கு 15 ஆண்டுகளின் முன்னர் புனருத்தாரணஅட்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்யப் பட்டது. மேலும் இவர்களின் பிர யாசத்தின் பயனாகப் பன்னிருமாத சோமவார உற்சவங்களும், வரு டாந்தமகோற்சவங்களும், பிரதோஷ உற்சவங்களும் சிறப்புற நடாத்தப் படுகின்றன.

ஆலயத் திருப்பணியையே தமது குறிக்கோளாகக் கொண்ட குருக்க ளவர்களின் ஆர்வம்நிறைந்த பக்தியை இன்றைய ஆலய வளர்ச்சியையும், ஒழுங்கு முறையையுங் கொண்டே தெளிந்துகொள்ளலாம். ஆலயத்தின் வருமானம் முழுவதையும் திருப் பணிக்காகவே அர்ப்பணித்துள்ள குருக்களவர்களின் பணி மேலும் சிறப்பதாக. சைவ அன்பர்கள் புரா தனப் பெருமைவாய்ந்த இத் திருத் தலத்தின் உயர்வை முன்னிருத்தித் திருப்பணிக்கு உதவிபுரிந்து நகுலாம் பிகா சமேத நகுலேசுவரப் பெரு மானின் அருள் பெற்றுய்வார்களாக.

தேவர்தொழுங் கீரிமலைச் சிவன்கோயிற்
திருப்பணியைச் செய்விப் போரும்
ஆவலொடும் பலபொருள்க ளளித்ததன்சீர்
வளர்த்திடற்கே யகங்கொண் டோரும்
பூவனிதை பாவனிதை போற்றுநகு
லாம்பிகையைப் புணரு மெங்கோன்
சேவடியாம் பெருவாழ்விற் றிளைத்துமகிழ்ந்
திடுவரிது திண்ணந் தானே.

௳
சிவமயம்

# சோதி

வி. சங்கரப்பிள்ளை, பன்னாலை

[கீலக ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தாறும் நாள் மங்கலவாரத்தன்று சூரியனது சோதி உச்சநிலை யடைந்திருக்கும் நண்பகல், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் என்னைச் சந்தித்து, வரும் சித்திராபூரணைத் தினத்தன்று சகசிர சோதி மண்டல சங்காபிஷேகம் ஸ்ரீ நகுலாம்பிகைக்குச் செய்யத் திருவருள் பாலித்திருக்கின்றதென்றும், அதையிட்டுச் சிறப்பு மலரொன்று வெளியிடுவதென்றும், அம் மலரில் ''சோதி'' என்ற பொருள் பற்றி உமது கட்டுரையொன்று இடம்பெற வேண்டுமென்றுங் கற்பித்தார்கள். கேட்டதும் அச்சமுற்றேன். என் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்ட விடயமாக விருக்கிறதே ; திருவருட்டுணைகொண்டு சிந்திக்கின்றேன் ; சிந்தனை சரிவரின் சமர்ப்பிக்கின்றேன். சரிவராவிடின் விடுகின்றேன் என்றேன். சரிவரும் என்று ஆசி தந்து சென்றனர்.

ஆதீனம் அவர்கள் சென்றபின் அருளாளர்கள் சோதி பற்றி எவ்வாறு அருள் நூல்களில் எடுத்து ஆண்டுள்ளார்கள் என என் சிந்தையைக் கிளறலுற்றேன். அப்போது, ''சோதியே சுடரே சூழொளி விளக்கே'', ''ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ் சோதியே'', ''ஒளிவளர் விளக்கே'', ''பாசுபதா பரஞ்சுடரே'', ''விளக்கைப் பிளந்து விளக்கினையேற்றி'', ''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக'' ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது'', ''நல்லக விளக்கது நமச்சிவாயவே'' என்ற அருள்மொழி அடிகள் திருவருட்டுணையால் ஞாபகத்துக்கு வரலாயின. இவற்றால் என் அச்சம் ஒருவாறு அகன்றது ; துணிவும் பிறந்தது.]

சோதி — தீபம் — விளக்கு — ஒளி — வெளிச்சம் — சுடர் என்னுஞ் சொற்கள் ஒரே கருத்துடையன. இறைவனது திருவடிவம் சோதிவடிவமாதலை அருளாளர்கள் பலருங் கண்டனர். ஆகையால், அவர்கள் மேற்கூறிய திருவடிகளிற் சொல்லப்பட்டவாறு கூறி வழிபட்டனர். சூரியன், சந்திரன், அக்கினி என்பவற்றின் ஒளியும் இறைவனது திருமேனியின் ஒளியேயென்பதை, ''தேசமார் ஒளிகளெல்லாம் சிவனுருத் தேசது'' எனச் 'சிவஞான சித்தியார்' கூறுகின்றது. ஒளி இருளைப் போக்குவது உலகின்கண் நாம் கண்டறிந்ததாகும். அந்த ஒளிவடிவினனாக இறைவன் போற்றப்படுவதால் அவனும் இருளை அகற்றுபவனாதல் வேண்டும். உலகவிருளைப் போக்குவதற்குச் சூரியன், அக்கினி முதலானவையே போதும் என்பது வெளிப்படை. ஆகவே இறைவன் போக்குவது உலகில் நாம் நன்கறியும் இருளையன்று ; வேறு இருளேயென்பது தெளிவுபடுகின்றது. அவ்விருள் எது ? அதுதான் அகவிருள் ; அஃதாவது அறியாமை — அஞ்ஞானம். அஞ்ஞானம் ஞானத்தாலே போக்கப்படுமாதலின், அஞ்ஞானமாகிய அகவிருளைப் போக்கும் ஒளியாக இறைவன் உள்ளான் என்பதற்கு ஞானவடிவாய் இயங்குகிறான் என்பதே பொருளாகும். ஆகவே, ''சோதியே சுடரே'' என்பன முதலாகச் சொல்லப்படும் சொற்களுக்கெல்லாம் ஞானம் அல்லது அறிவு என்பது பொருளாயிற்று.

ஞானம் அல்லது அறிவு என நாம் இவ்வுலகில் அறிவனவெல்லாம் அறியாமைக்குப் பின் தோன்றுவன வாயும், தோன்றியபின்பும் அறியா மையால் மறைக்கப் படுவனவாயு முள்ளன. ஆகையால், அனைவரது அறிவுக்கும் ஆதி அந்தமுண்டு. இறை வனது அறிவு அவ்வாறின்றி என்றும் ஒரு பெற்றித்தாய் விளங்குவது. இத ஞல் இறைவன் ஆதியு மந்தமு மில் லாத சோதியாவன்.

உயிர்களுடைய அறிவுக ளெல் லாம் சிலவற்றையேயறியும் அறிவே யல்லாது எல்லாவற்றையும் முற்ற அறியும் அறிவல்ல. இறைவனது அறிவு அவ்வாறின்றி எல்லாவற்றை யும் ஒருங்கேயறிந்தாங் கறிந்து நிற் கும் முற்றறிவாம். அதனுல், உயிர் கள் சிற்ருெளியின; இறைவன் பேரொளியினன். ஆகையால், பரஞ் சோதியெனப்பட்டான். ஆதியு மந்தமு மில்லாத பரஞ்சோதியை ஆதியு மந்தமு முடைய சிற்றறிவு அறிதலென்ருல் அஃது எளிதான செயலா? எளிதென வெண்ணியதா லேயே பிரம விஷ்ணுக்கள் இடருற் றனர். அவனருளே கண்ணுகக் கொண்டு காணும் அருளாளர்களே காணமுடியும்.

உலகத்தார் மகிழ்ச்சியோடு போற்றும் மங்கலப் பொருள்களில் விளக்கு முதன்மையானது. எந்த வொரு மங்கலச் செயலும் விளக் கேற்றிச் செய்வதே நம் நாட்டு வழக்கம். நம்மவர்களுக்கு விளக்கில் ஏன் இவ்வளவு நாட்டமெனில் ஆண் டவனது பல வடிவங்களில் ஒளியே அவனுக்குச் சிறப்பு வடிவமாதல் பற்றியேயாம். மக்கள் தங்கள் வீடு களுக்குப் பலவகை விளக்குகளையும் ஏற்றி மகிழ்வர். அம் மகிழ்வு பூரண மானதன்று. ஆகையால், மற்ருெரு விளக்காகிய அகவிளக்கையு மேற்ற வேண்டுமென்று திருமூலர் கூறுகின் ருர். யாவரும் புறவிளக்குகளை எளி தில் ஏற்றி வைக்கின்றனர். புறவிளக் கைத் தகளியில் ஏற்றி வைக்கின்ற னர். தகளியும் விளக்கென்று ஆகு பெயராகக் கொண்டு சொல்லப்படு வதை நாம் அறிவோம். தகளியும் விளக்கு; அதில் ஏற்றப்படும் ஒளியும் விளக்கென்ருல், விளக்கில் விளக்கை ஏற்றுஞ் செயல்தான் நடைபெறு கின்றது.

புறத்தேபோலவே அகத்திலும் விளக்கில் விளக்கை ஏற்றவேண்டு மென்கிருர் திருமூலர். அஃது உயிரி னுடைய அறிவாகிய விளக்கில் ஆண் டவனது அருளாகிய விளக்கு ஏற்றப் படல்வேண்டு மென்பதாம். விளக்கு என்பது அறிவு; இருளென்பது அறி யாமை. உயிர் அறிவுடைப் பொரு ளாயினும் ஆணவ இருளால் மூடப் பட்டிருப்பதால் அது தகளிபோல ஒளியற்றுக் கிடக்கின்றது. அஃது உண்மையில் ஒளிபெறவேண்டுமாயின் அதன்கண் இறைவனுகிய விளக்கு ஏற் றப்படல்வேண்டும். அவ்வாறு இறை வனுகிய விளக்கை உயிர்கள் ஏற்றி விட்டால் அது ஞானமாகிய ஒளியை வீசிக்கொண்டிருக்கும். ஏற்றிய விளக் கைத் தூண்டவும் வேண்டும். அப் போதுதான் அது பேரொளி கொடுக் கும். அதுபோல உயிர்களில் ஏற்றப் பட்ட இறைவனது விளக்குந் தூண் டப்படல்வேண்டும். அப்போதுதான் பேரானந்தப் பெருவாழ்வாம் திரு வடிநிலை உயிர்க்குக் கைகூடும்.

"விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே".

என்பது, திருமூலர்தம் 'திருமந்திர'த்தில் நமது இருள் போக ஏற்றி வைத்த விளக்காகும்.

விளக்கு என்பது அறிவாகையால் சிற்றறிவாகிய ஆன்மாவையும், பேரறிவாகிய இறைவனையும் திருமூலர் விளக்கு என்றே குறிப்பிடுகின்றார். "அறிவினுள்ளே அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து" எனச் 'சிவஞானசித்தியார்' கூறுவதும் இதுவே.

"உடம்பெனும் மனைய கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனுந் திரிம யக்கி
இடம்படும் ஞானத் தியால்
எரிகொள இருந்து நோக்கின்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே"

என்ற திருப்பாட்டில் அப்பர் சுவாமிகள் உயிரும் அதன் அறிவுமென இரண்டாகப் பிரித்து உயிரைத் தகளியென்றும், அறிவைத் திரியென்றும், அறியாமையால் உண்டாகின்ற நான் என்னும் முனைப்பை நெய் யென்றும் வைத்துத் திருமந்திரக் கருத்தைக் கூறுகின்றார்.

விளக்கு கண்டம், அகண்டம், கண்டாகண்டமென மூவகைப்பட்டு, கண்ட விளக்கு வீட்டு விளக்காயும், அகண்ட விளக்கு சிவஞானப் பிரகாச விளக்காயும், கண்டாகண்ட விளக்கு சூரிய சந்திர அக்கினி யென்னும் முச்சுடர் விளக்காயும் நிலைபெறுவனவாய்த் தத்தம் தன்மைக்கேற்றவாறு பலவிதமாய் இருளினையோட்டுகின்றன.

"இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே".

என்ற அப்பர் சுவாமிகளின் நமச்சிவாயத் திருப்பதிகப் பாசுரம் யாவராலும் நோக்கத்தக்கது.

நாம் நாள்தோறும் வீடுகளில் ஏற்றுகின்ற விளக்கு இல்லக விளக்காகும்; அது புறவிருளை மட்டுமே போக்கும்; அகவிருளைப் போக்கும் விளக்கு வேறுள்ளது; அதுதான் சிவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தாகும். அதை முதலில் அருளாசிரியரின் அருள் மொழியால் செவியில் ஏற்றி, பின் நாவில் ஏற்றி, அதன்பின் உள்ளத்திலேற்றி, இறுதியாக உணர்வில் ஏற்றிவிட்டால் அகவிருள் முற்றாக நீங்கி ஆனந்த வெள்ளம் உண்டாகும்.

இறைவனைச் சோதி வடிவிற் கண்டு வழிபடும் சிறப்பு நாள் திருக்கார்த்திகை நாளாகும். இந் நாளில் எல்லாக் கோயில்களிலும், இல்லங்களிலும் விளக்குகளை வரிசை வரிசையாக நிறைய ஏற்றி வைத்து வழிபாடியற்றுவர். இதை விளக்கீடென்றுங் கூறுவர்.

நகுலேஸ்வர ஆதீனமவர்கள் சோதி வடிவிற் சொக்கியமையாற் போலும் நம் நாட்டிற்குப் புதிதான சகசிர சோதி மண்டல சங்காபிஷேகத்தை ஸ்ரீ நகுலாம்பிகைக்குச் சித்திரா பூரணைத் தினத்தன்று செய்ய, பங்குனி உத்தர தினத்தன்று அவர்களிடம் திருவருள் உணர்த்தியிருக்

கின்றது. அவ்வுணர்த்துதல் யாமனே வரும் சோதிமய அபிஷேகக் காட்சியைக் கண்டின்புற வாய்ப்பளிக்கின்றது. அச் சோதிமய அபிடேகம் எனக்குப் புதிகாக இருந்த காரணமாக ஆதீனம் அவர்களோடு உரையாடிய வகையால் திருவருட்டுணை கொண்டு சிந்தனையிலெழுந்த சிலவற்றைக் கூற முற்பட்டுள்ளேன்.

'' சகசிர சோதி மண்டல சங்காபிஷேகம் '' என்ற தொடர்மொழியை, சகசிரம் + சோதி + மண்டலம் + சங்கு + அபிஷேகம் எனப் பிரித்துப் பார்க்கும்போது, ஆயிரஞ் சோதியுள்ள விருத்தாகாரத்தில் தாபிக்கப்பட்ட சங்குகளினுல் அபிடேகித்தல் என்ற பொருளை அது தந்து நிற்கின்றது. எனவே, ஆயிரந் தகளிகளில் ஏற்றப்படும் ஆயிரம் விளக்குகளும் பல வகைப்பட்ட உயிர்களாகிய தகளிகளிலே பரஞ்சோதியாகிய விளக்கை ஏற்றுவது போலாகவும், அவ்வொளி விருத்தாகாரமான அண்டங்கள் தோறும் பிரகாசித்துக் கொண்டு விளங்குவது போலவும் ஆகும். உயிராகிய விளக்கிற் பரஞானமாகிய ஒளியை ஏற்றி அன்பாகிய நீரைப் பிரணவ வடிவினதான சங்கிற் பாய்ச்சி அம்பாளுக்கு அபிடேகித்தல் உயிர்கள் மாட்டுத் திருவருட் சத்தி பிரகாசிக்கச் செய்தலாகும். சிற்சத்தி பதிதல் என்றுங் கூறலாம். இச்சிற்சத்தி உயிர்களைச் சிவானந்தப் பெருவாழ்வில் ஆழ்த்தும். ''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி'' என்ற திருவருட்பயன் ஆசிரியர் கருத்தும் இதுவே.

ஆகையால், அன்பர்களே! வரும் சித்திரா பூரணை நற்றினத்தை (1–5–69 வியாழக்கிழமை) எதிர்நோக்கி ஸ்ரீ நகுலாம்பிகையின் சகசிர சோதி மண்டல சங்காபிஷேகத்தைக் கண்டு அம்பாளின் அருட்சோதியில் தோய்ந்து பேரின்பமுறுவோமாக.

இப் புதுமுறை அபிடேகத்தை நம் நாட்டவர் கண்டு திருவருட் சோதி பெறவும், அபிடேகச் சிறப்பு மலர் வெளியிடவும் ஏற்பாடு செய்த ஆதீனம் அவர்களுக்கு எனது உளங் கனிந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன். இக் கட்டுரை இம் மலரில் இடம்பெறத் தூண்டியமைக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

'' விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞான மாகும் ''.

— அப்பர்

EVELYN RUT INSTITUTE
21
REFER E
LIBRARY

உ
சிவமயம்

# வீர இலக்குமி

பண்டிதர் செ. சிவப்பிரகாசம்

"செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே! வேலை
அங்கணுல கிருள்துரக்கும் அலர்கதிராய்,
வெண்மதியாய், அமரர்க் கூட்டும்
பொங்கழலாய், உலகளிக்கும் பூங்கொடியே!
நெடுங்கானிற், பொருப்பின், மண்ணில்,
எங்குளைநீ, அவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி இருப்ப தம்மா!"

உலகத்து வாழ்கின்ற சீவகோடிகள் எல்லாவற்றையும் பெருது பெற்ற நித்திய கன்னிகையாக உள்ளவள், பராசக்தி. சித்தியும் சிவமும் எக்காலத்தும் ஒன்றித்தே இருப்பர். சிவமின்றிச் சத்தியில்லை; சத்தியின்றிச் சிவமில்லை. அணுவுக் கணுவாய், அப்பாலைக் கப்பாலாய் நிற்பவர்கள், சிவமுஞ் சத்தியுமாவர். சத்தி என்பது, சிவத்தின் வேருகாத திருவருளாகும். அத்திருவருளின்றி உலகு நடைபெற மாட்டாது. உலகமெல்லாந் திருவருளின் விளக்கமேயாம். அத்திருவருளாகிய சத்தி, ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு, சிவம், சத்தி, நாதம், விந்து, மனேன்மணி, மகேஸ்வரி, உமை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய ஒன்பது பேதங்களாக நிற்கும். அவ்வொன்பது பேதங்களுக்கேற்பச் சிவமும், சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் ஆகிய ஒன்பது சிவபேதங் கொண்டு, பராசத்தியின் ஒன்பது பேதங்களுடனும் ஒன்றித்து நின்று, அருள் செய்வன். சிவபேதம் ஒன்பதும் அருவம், உருவம், அருவுருவம் என மூவகைத் திருமேனிகளாக அமையும். அவற்றுள் சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் அருவத்திருமேனி எனப்படும். மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கும் உருவத்திருமேனி எனப்படும். சதாசிவன் அருவுருவத் திருமேனி எனப்படும். இம்மூவகைத் திருமேனிகளும் முறையே நிஷ்களம், சகளம், நிஷ்கள சகளம் எனவும் அழைக்கப்படும்.

இவ்வண்ணம், அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளையும் சிவம், ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் தாங்கி அருள் செய்வார். அங்ஙனம் அருள்செய்யுந் திருமேனிகளுள், ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியாக நின்று அருள்செய்யும் திருமேனியும் ஒன்ருகுமென்று மேலே கண்டோம். அவ் விஷ்ணு மூர்த்தியின் சத்தியாக உள்ளவள் இலக்குமி. அவ்விலக்குமியே செல்வங்களெல்லாவற்றையுங் கொடுப்பவளாய் உள்ளாள். அதனுல் அவள், எப்பொருளையுங் காண்பிப்பவளாய் இருக்கிருள். அன்றியும் எல்லோராலுங் காணப்படக் காரணமாயுள்ளவளும் அவளே! இதனுற்ருன், இலக்குமி என்னும் பதத்திற்கு, எப்பொருளையுங் காண்பிப்பவள் என்றும், காணப்படக் காரணமாயுள்ளவள் என்றும் பெரியோர்கள் பொருள் கூறுவர்.

இலக்குமிக்குத் திரு முதலிய பல நாமங்களுள. கடற்பிறந்த கோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், சீதேவி, அலர்மகள், பொருளின் செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், சலசை, இந்திரை முதலிய பெயர்களால் இலக்குமி அழைக்கப் படுவாள்.

அவ்விலக்குமி, எல்லோராலும் விரும்பப்படுபவள்; திருப்பாற் கடலிலே பிறந்தவள்; உலகமாதாவாக உள்ளவள்; திரவியங்களெல்லாம் உடையவள்; விட்டுணுவின் மனைவியாயுள்ளவள்; செல்வமுடையவள்; பொன்னுடையவள்; எல்லாராலும் வணங்கப்படுகிறவள்; செந்தாமரை மலரிலிருப்பவள்; பொருட் செல்வமுடையவள்; எல்லாரிடத்துஞ் சென்று சேரும் பெண்ணாக உள்ளவள்; பின் பிறந்தவள்; ஐசுவரியத்துடன் கூடியவள்.

இங்ஙனமிருத்தலால், இன்பம் வேண்டி வாழும் எல்லா மனிதரும் இலக்குமிதேவியை மிக விரும்புவார்கள். விஷ்ணுமூர்த்திக்கும் இலக்குமிதேவிக்கும் மானச புத்திரனாக உதித்தவன், மன்மதன். அதனால் அவனுக்குச் சித்தசன் என்றும் பெயர் வழங்குகின்றது. அவன் எவர்களுக்கும் இச்சையை உண்டாக்குபவன். எல்லோராலும் பொருள் வேண்டி இச்சிக்கப்படுகின்ற இலக்குமிதேவியின் மகனும் யாவருக்கும் இச்சையை உண்டாக்குகின்றான். ஆனால், இந்த இச்சைகளின் பொருள் வேறு. ஒன்று விருப்பம்; மற்றையது காமம். காமத்தை உண்டாக்குபவனாதலால் காமன் எனப்பட்டான். காமதகனம் மிகப் பிரசித்தம்! நிற்க,

இலக்குமி தேவிக்குரிய பேதங்கள் சிலஉண்டு. அவையாவன; மகாலக்குமி, ராஜலக்குமி, வீரியலக்குமி, நித்தியலக்குமி, கெஜலக்குமி, கோலக்குமி, அஸ்வலக்குமி, பூதகாருண்யலக்குமி, சௌரியலக்குமி, கீர்த்தியலக்குமி, சௌபாக்கியலக்குமி, சந்தானலக்ஷ்மி என்பனவாம். இப்பேதங்களை எட்டாகப் பகுத்து அட்டலக்குமி எனவும் வழங்குவர்; (அட்டம்-எட்டு). அவ்வட்ட லக்குமிகளுள் மாந்தர்க்கு வீரத்தைக் கொடுப்பவள் வீரலக்குமியாவள். இவள் வீர்யலக்குமி எனவும் அழைக்கப்படுவள்.

நவராத்திரி காலங்களில் சத்தி வழிபாடு செய்வது மிகப் பிரசித்தம். ஒன்பது நாள்களிலும் ஒன்பது சத்திகளுக்கும் வழிபாடு உண்டு. அவ்வொன்பது சக்திகளும், மகேஸ்வரி, கௌமாரி, வராகி; மகாலக்குமி, வைஷ்ணவி, இந்திராணி; மகாசரசுவதி, நாரசிம்மி, சாமுண்டி என அழைக்கப்படுவர். இவ்வொன்பது சத்திகளையும் சுருக்கி மூன்று சத்திகளாகவுங் கூறுவர். அவை: துர்க்கை, லக்குமி, சரசுவதி என்பனவாம். இம்மூன்று சத்திகளுள், துர்க்காதேவி வீரத்துக்குரியவளாகி முதல் மூன்று நாள்களுக்கும், இலக்குமிதேவி செல்வத்துக்குரியவளாகி நடு மூன்று நாள்களுக்கும் சரசுவதிதேவி கல்விக்குரியவளாகிக் கடைசி மூன்று நாள்களுக்கும் கொண்டாடப்படுவர். மக்களுக்கு வேண்டிய தலையாய இன்பங்கள், வீரமும் செல்வமும் கல்வியுமாகும். இவ்வீரத்தைத் தருபவளையே நாம் வீரலக்குமி என்று அழைக்கின்றோம். இப்படியாகிய பெண் தெய்வ வழிபாடு பண்டைய சங்ககால இலக்கியங்களிலே பரக்கப் பேசப்படுகின்றன.

கொற்றவை வழிபாடு, கொல்லிப்பாவை வழிபாடுகளை நமது பண்டைய இலக்கியங்களிலே ஆங்காங்குக் காண லாம். இதனல் பெண் தெய்வ வழி பாடு மிகப் புராதனமானது என்பது நமக்குநன்கு புலப்படுகின்றதல்லவா? வீரலக்குமி வழிபாடும்மிகமிகப் புராதன மானதே!

வீரமானது, மாந்தர் எல்லோ ருக்கும் ஆண்பெண் என்ற பாகுபா டின்றி வேண்டப்படுவதாகிய ஒரு பண்பாகும். வீரமுள்ளவர்களையே எல்லோரும் விரும்புவர். வீரமுள்ள வர்களே எவற்றையுஞ் செவ்வனே செய்து நிறைவேற்ற வல்லவர்க ளாவர். இல்லற வாழ்க்கையில் வாழ் பவர்களாயினுஞ்சரி, துறவற வாழ்க் கையில் வாழ்பவராயினுஞ் சரி எவர்க ளுக்கும் வீரம் வேண்டும். சிவனடி யார்களின் பெருமையைக் கூற வந்த சேக்கிழார் சுவாமிகள் :

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்,
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னல் விளம்புந் தகையதோ!"

என்று விதந்து விளம்புகின்ருர். சிவ னடியாருடைய திருக்கோலத்தையும், திருத்தொண்டையும், திருவுள்ளத் தையும், நிறைவையும் விட, அச் சிவனடியார்களது வீரமே மிக மேலானது எனச் சேக்கிழார் சுவாமி கள் எடுத்துக்காட்டும் "வீரம் என் னல் விளம்புந் தகையதோ?" என்ற பகுதி எத்துணைச் சிறப்புடையது என்பதைக் கற்ருேர்கள் கண்டு இன் புறுவர். வீரம் அத்துணை மேலான சிறப்புடையது.

வீரம் மாந்தர் எல்லோரிடத்தும் உள்ளதாயினும், அம்மக்கட்கு உயி ரென உரைக்கப்படுகின்ற அரச னிடத்தே தவருது இருத்தல் வேண்டும். வீரமாகிய திரு உள்ள அரசனை "இறை" என்று அழைப்பர் மேலோர். ஏனெனின், வீரமுள்ள வழியே அரசன், தனது முறையாகிய அற நூலும் நீதிநூலும் சொல்லும் நெறி பிறழாது நின்று, தன் கீழ் வாழுங் குடிமக்களைக் காப்பாற்ற முடியும். அதனுலேயே திருக்குறள் தந்த செந் நாப் போதரும்,

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறைஎன்று வைக்கப் படும்"

என்று அருளிப் போந்தார்.

இன்னும், உலக பாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின் இறை என் ருர். "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேன்" என வருந் திருவாய் மொழியாலும், அரசன் இறை என அழைக்கப்படுவது அறி யத்தக்கது. அரசன் வீரமுடையவ ஞக இருந்து, தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி, அறமல்லாத பாவங் கள் தன்னுட்டில் உண்டாகாமற் காத்து, வீரத்தின் வழுவாத மான முடையவனுக இருத்தல் வேண்டும்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு."

என்பது பொய்யா மொழியாகும். மறனிழுக்க மானம், வீரம் மிக்க அரசனுக்கு வேண்டியதாகும். வீரம் மிக்க அரசனின் கொற்றம், "மாண்ட —அறநெறி முதற்றே" ஆகும்.

"கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்."

என வரும் மருதனிளநாகனுர் பாடிய புறநானூற்றுப் பகுதியும் இதனை நன்கு வலியுறுத்தும். மறனிழுக்கா மான முடைய அரசன்,

"வீறின்மையின் விலங்காமென
மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும்
பிறர்மிச்சிலென் றெறியான்,
மாறன்மையின் மறம்வாடுமென்
றிளையாரையு மெறியான்,
ஆறன்மையின் முதியாரையும்
எறியான் அயிலுழவன்."

என விதந்து சொல்லப்படுபவனுக வாழ்வன். "அழியுநர் புறக்கொடை அயில்வே லோச்சான்" என்பர் சீவக சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவர். அரசனது தன்மை இங்ஙனமாகிய மிக்க வீரமுடையதாக இருத்தல் வேண்டும். இவ்வீரமுடைய அரசனுக்கு வீரம்மிக்க படை மறவர் சுற்றமாயமைந்து காப்பர். அவர் தமக்கும் அரசனுக்கும் பேதங்காணுர். அஞ்சாமையுடையவராய் வாழ்வார். அதனுல் அப்படை வீரர் மறம் மிகுந்தவராக வாழ்வர். அவர் பகைவரது படையைச் சேர்ந்து தம்மாண் மையை எடுத்துரைப்பர். இதனை நெடுமொழிவஞ்சி என்பர் வெண்பா மாலையார். திருவள்ளுவரின் திருவாக்கு அந்நெடுமொழி வஞ்சியை இயம்புகின்றது.

'என்னைமுன் நில்லன்மின் றெவ்விர்பல
ரென்னை
முன்னின்று கன்னின் றவர்."

என்பது அவ்வாக்காகும். அப்படை வீரர் பேராண்மை மிக்கவர். அவர் பகைவர்மேற்கண்ணேடாது செய்யும் மறத்தை உடையவராய், ஆண்டகைமை யுடையவராய் இருப்பர். தம் வாழ்நாள் முழுவதும் முகத்தினும் மார்பினும் புண்ணுடையவராய் வாழ்வர். இவ்வாழ்வை விழுப்புண்ணுடைய நாளென்பர். அவ்விழுப்புண் படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாள்களுள்ளே வைப்பர். தம்மை ஆண்ட வீரம்மிக்க அரசர், கண்கள் நீர்மல்கும்வகை போரிடைச் சாவப் பெறின், அச் சாக்காடு இரந்தாயினுங் கொள்ளுந் தகுதியை உடையது என எண்ணுவர். அவர் தாம் கூறின வஞ்சினம் தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்லவராவர். அவ்வித வீரமுடைய படை வீரரைப் பெற்ற அரசரே, முறை செய்து காப்பாற்றும் வீரம்மிக்க அரசராவர். அவ்வரசரிடத்து வீர லக்குமி எஞ்ஞான்றுங் குடிகொண்டே இருப்பாள். அவ்வரசருடைய வீரமும் விளம்புந்தகைய தன்றன்ரே!

வீரம்மிக்க அரசனிருந்து ஆளும் நாடானது எக்காலமும் நாடாவள முடையதாக இருக்கும். குன்றுத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும் கூடிவாழ்வதாக இருக்கும். அதனுல் அந்நாட்டை இலக்குமி குடிகொண்ட நாடென எவரும் போற்றுவர். வீரலக்குமியுடன் சௌரிய லக்குமியும் கோலக்குமியும் கீர்த்திய லக்குமியும் சௌபாக்கிய லக்குமியும் எக்காலமுங் குடிகொள்வர். அதனுல் மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ்வர். பசியும் பிணியும் பகையும் நோயும் அந்நாட்டை நலியாது. வளனெல்லாஞ் சுரக்கும் நாடு அந்நாடு என்று புலவர் பலர் பாடும் நாடாக அந்நாடு அமையும். அந்நாட்டு அரசனைப் பல்லாண்டு வாழும்படியாகப் பாவலர் பலரும் பாராட்டிப் பாடுவர்.

புறநானூறு முதலிய நூல்கள் இதற்குச் சான்றாகும்.

ஒரு நாட்டில் வாழும் மன்னவன் சிறந்த வீரமுடைய மன்னவற்கே தன் மகளைக் கொடுக்க ஒருப்படுவன். அதனாலே சுயம்வரம் போன்ற மணமுறைகளும் அமைந்தன. இம்மாதிரியான மணங்களிலே மிக்க வீரதீரமுடைய, ஒப்பாருமிக்காருமில்லாத ஒரு தலைவனுக்கே மகட்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும். அப்படியான மணங்கள் பல பண்டைய தமிழ் நாட்டிலே பல்கி நடைபெற்றுள்ளன. சீதா கல்யாணம், திரௌபதி கல்யாணம், தமயந்தி கல்யாணம் முதலியன இதற்கு உதாரணங்களாகும்.

ஒரு நாட்டில் வாழ்ந்த வீரர்களைத் தெய்வம்போலாக்கி வழிபடும் வழக்கம் மிகவும் பழைமையுடையது. பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே யுள்ள பொருளதிகாரம் அறுபதாம் சூத்திரத்தில் இவ்வழக்கம் கூறப்பட்டுள்ளது.

"காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை
வாழ்த்தல் என்று"

என வரும் அச்சூத்திரப்பகுதியிலே, உருவமமைத்தற்கு வேண்டிய கல்லினைக் காண்டலும், அக் கல்லில் உருவத்தை அமைத்தலும், அவ்வுருவை நீராற் றூய்மை செய்தலும், நீர்ப்படுத்திய கல்லை நடுதலும், அவ்வீரனது பெரும் புகழைப் பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புச் செய்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி வாழ்த்தலும் பண்டுதொட்ட பண்பாடான வழக்கமாகும் என்பது புலப்படுகின்றது. வீரர்களுள் தலைசிறந்த வீரனாக விளங்கிய இராமபிரானையும் அவரது வாழ்க்கைத்துணையாக இருந்த கற்பின் செல்வியாகிய சீதாபிராட்டியையும் இவர்களுக்கு எக்காலத்தும் உறுதுணையாக இருந்த சொல்லின் செல்வனும் வீரருள் வீரனுமாகிய அநுமனையும் வழிபட்டுவரும் முறைமை யாவரும் அறிந்ததேயாகும். வீரபத்தினியாகிய கற்பின் செல்வி கண்ணகிக்குச் சிலைநாட்டி வழிபாடாற்றிய திறம் சிலப்பதிகாரக் காப்பியத்திலே பரக்கப் பேசப்பட்டுள்ளது.

இராமபிரான் இராவணனை யுத்த களத்திலே நோக்கி "இன்று போய் நாளை வா" என இயம்பிய வீரமே மேலான வீரம். படையிழந்த கையுடைய இராவணனுக்குச் செய்த, நடைசிறந்த இராமபிரானின் இந்த நனிநாகரிகச் செயல், வீரத்தின் உச்சப்பகுதிக்குக் கொண்டு சென்று வைத்தது. வீரர்க்கழகு இவ்வீரமே. வீரருள் வீரன் இராமனேயென இராமாயணத்திற் பல இடங்களிலும் எடுத்தியம்புவதும் இப் பண்பட்ட வீரச் செயலாலேயேயாகும். மிதிலையில் வில்முரித்த வீரத்திலும் இவ் வீரம் மேலானதன்றோ! கார்த்த வீரியார்ச்சுனனை வென்றமையும், மராமரங்களை எய்தமையும், அரக்கர் கிளையை வேரறுத்தமையும் இராமபிரானில் வீரலக்குமி குடிகொண்டிருந்தமையானன்றோ!

பாண்டவர்க்கு வெற்றி ஈட்டிக் கொடுத்தது பாண்டவர் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வீரம் மாத்திரமன்று. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் உறுதுணையுமன்று. அருச்சுனனின் வில்வீரமே. அருச்சுனனின் வில்வீரமாகிய வீராக்கினி, ஸ்ரீகிருஷ்ணபகவானின் சகாயமென்னும் பிரசண்ட மாருதக் காற்றுடன் பின்னிப் பிணைந்து ஒன்றுபட்டுச் சென்று, கௌரவரது சேனை

யைச் சாம்பராக்கியது. இதனுல் பாண்டவர் வீரராயினர். கர்ணனின் வில்வீரமாகிய மின்மினியானது அருச்சுன னின் வில்வீரமாகிய சூரியன் முன்னே ஒளிராததாயது. இதனுலே பாண்டவ ருக்கு விஜயலக்குமியும் உடனுறைவா ளாயினள். வீரிய லக்குமியும் விஜய லக்குமியும் கீர்த்திய லக்குமியும் ஒன்று சேர்ந்து ராஜலக்குமியை அவர்களுக் களித்தன. அதனுல் அவர்கள் அற நெறி தவருத அரசர்களாயினர். அவர்களுடைய வீரலக்குமி என்றும் நிலையுடையவளாயினுள்.

வீரப் பெருங் காப்பியமாகிய கந்தபுராணத்திலே கச்சியப்ப சுவாமி களாற் காட்டப்படும் வீரவாகுதேவர் முதலாய இலக்கத்தொன்பதின்ம ருடைய வீரமும், சூரபன்மன், சிங்க முகன், தாரகன் முதலிய அவுணர்களது வீரமும் யாவரும் அறிந்தனவே. சூரபன்மனுடைய வீரத்தின் முன்னே வீரவாகுதேவருடைய வீரம் எதிர் நிற்க முடியாது போயிற்று. ஆனுல் வரம்பிலா வரம்பெற்றுயர்ந்தவனுகிய சூரபன்மனின் வீரமோ மாயா செயல் களோ இவை யாவும் சிவசுப்பிர மணியப் பெருமானது வீரமாகிய பிரசண்ட மாருதக் காற்றின் முன்னே பூளைப்பூப்போலாயிற்று. சிவசுப்பிர மணியக் கடவுளின் மேலே நக்கீரதேவ ராற் பாடப் பெற்ற திருமுருகாற்றுப் படையிலே முருகனது வீரத்திறங்கள் பலபடித்தாகப் பாராட்டப்பட்டுள் ளன.

"..................... மாற்றோர் கூற்றே"

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"

"வானோர் வணங்குவிற் றனைத் தலைவ"

"செருவி னொருவ! பொருவிறன் மள்ள!"

"வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!<br>குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து<br>விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!"

"மண்டமர் கடந்தநின் வென்று டகலத்து"

"சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி<br>போர்மிகு பொருந ................. "

எனவரும் இப்பாடற் பகுதிகளால் வீர லக்குமியோடு விளங்கிய குன்றுக் கொற்றம் நன்கு புலப்படுகின்றதே! இதனுல் வீரலக்குமிக்கிருந்த விழுமிய மேன்மை வியப்படையத்தக்கவாறு வீறுபெற்றேங்குதல் வெள்ளிடை மலை. மனிதர், அரசர், தேவர் ஆகிய யாவருக்கும் வீரலக்குமி விழுமிய மேன்மையை அளித்துள்ளாள். மக்கள் என்றும் வீரலக்குமியின் கடாட்சத்தினுலேயே, உலகில் மறம் மாண்டு அறம் பூண்டு வாழ்பவர் ஆகின்றனர். அறந் தலை தூக்க வீரலச்குமியே உதவுபவளாவாள். அவளது அருள் பெறுவதற்குத் தகுதி யுடையவர்களாக வாழுதல் வேண்டும்.

ஆதிசத்தியாகிய பராசத்தியிலிருந்து தோன்றிய இலக்குமி வழிபாடும், அவ் விலக்குமியின் ஒரு கூறுகிய வீர லக்குமியின் வழிபாடும், தமிழ்நாட்டின் கண்ணே பண்டுதொட்டே வழிவழி யாக வழங்கி வருகின்ற தலைசிறந்த தெய்வ வழிபாடுகளாகும்.

அவ்வழிபாட்டினைக் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் திருச் சந்நிதானத்திலே நாமும் வழிபடு கின்றேம்.

அன்னை பராசத்தியின் பரங் கருணைத் தடங்கடலின் கண்ணே மூழ்கி இன்புறும் பேரானந்தப் பெரு வாழ்வு நெறியும் நமக்குச் சித்திப்ப தாக!

வீரஇலக்குமியின் திருவடிகளே சரணம்!

உ

சிவமயம்

# விஜயலட்சுமி

பண்டிதை, தங்கம்மா அப்பாக்குட்டி

"பொன்னரசி நாரணனர்
தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல்
மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெலாம்
ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றுளே
சரண்புகுந்து வாழ்வோமே"

இறைவனது அருளாற்றலுக்கு சக்தி என்று வழிபட்ட மரபு சைவ மரபு.

"அருளது சக்தி யாகும்
அரன்தனக் கருளை யன்றித்
தெருள்சிவ மில்லை அந்தச்
சிவமின்றிச் சக்தி யில்லை."

என்பது சைவசித்தாந்தம் கூறும் உண்மை. 'உமா' என்ற சொல்லே முத்தொழிலையும் விளக்கும் அட்சரங்களாகிய அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று எழுத்துக்களையும் அடக்கி நிற்கிறது. வேண்டுவார் வேண்டுவதை ஈந்து அவர்க்கு அருளும் திறம்பற்றி அவ்வப் பொருள்கள் தோறும் வைத்து வேறு வேறு பெயரால் சக்தி வழிபாடு ஆற்றுகின்றனர். அறிவும் செல்வமும் ஆற்றலும் மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாமல் அமையவேண்டியவை. இவற்றில் செல்வம் நடுநாயகமாய் அமைந்திருப்பதன் சிறப்பும் சிந்திப்பதற்குரியது. "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பதும் பொருளிலார்க்கிவ்வுலகமில்லை யென்பதும் செல்வத்தின் அவசியத்தைக் காட்டுவன. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் கூட வேள்வி செய்யும் பொருட்டு தந்தையாருக்காக இறைவனிடம் பொன் கேட்டுப் பெற்றார் என்பர்.

"ஈவதொன் றெமக் கில்லையேல் இதுவோ
நமை யாளு மாறு"

எனக் கேட்டுப் பாடியது யாவருமறிந்தது. இத்தகைய செல்வத்தை நமக்களிப்பது இலட்சுமியின் கடாக்ஷமே.

இலட்சுமி என்பது முயற்சியுடையவனைப் பார்ப்பவள் என்ற கருத்திலே அமைந்ததாகும். இலட்சுமீகரம் விளங்குமிடத்தில் இலட்சுமி வீற்றிருப்பாள். அவள் அட்ட ஐசுவரியங்களையும் அளிப்பாள். செல்வம் என்று குறிப்பிடும்போது பொதுவகையில் ஒன்றேயாயினும் சிறப்பு வகையில் அதனை எட்டுப் பிரிவுகளாக்கிக் கூறுவர். அவையாவன: தனம், தானியம், பூ, சந்தானம், சௌபாக்கியம், வீரியம், விஜயம், தைரியம் என்பன. இவ்வெட்டினையும் தருதல் பற்றி திருமகளை ஒன்றாகக் கூறாது தனலட்சுமி, தானியலட்சுமி, பூலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்கியலட்சுமி, வீரியலட்சுமி, விஜயலட்சுமி, தைரியலட்சுமி எனக் கூறி வழிபடுவர். இவர்களை உலகியல்களை வழங்கும் சத்திகள் என்று கூறுவர்.

"நாற்கரந் தானுடையாள் — அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்"

என்பது பாரதியார் கூற்று.

திரு என்பது பொருள், அழகு, வீரம், வெற்றி, தைரியம் என்பவை யாவையும் அடக்கும் பல பொருள் ஒரு சொல்லாகும். இவற்றில் வெற்றித் திருவாக விளங்குபவள் விஜய லட்சுமி. வீரம், தைரியம் ஆகியவை இருப்பினும் வெற்றி கிட்டாவிட்டால் வாழ்வில் மகிழ்வெங்கே? ஒவ்வொரு உயிரும் வெற்றிக்காகவே துடிதுடித்து முயற்சி செய்கிறது. தொழிலிலே வெற்றி, போரிலே வெற்றி, இல்வாழ்விலே வெற்றி, துறவிலே வெற்றி, கல்வியிலே வெற்றி. இப்படியாக எந்தெந்தத் துறையிலும் வெற்றியையேவிழைந்து நிற்பவர்கள் நாம். எனவே வெற்றித் திருவாகிய விஜயலட்சுமியைச் சிந்தையிலும் சென்னியிலும் மலர்வித்துப் பூசிக்கவேண்டிய கடமை நமக்குண்டு.

விஜயலட்சுமியின் திருத்தோற்றம் மூன்று கரங்களில் தாமரை கொண்டு ஒரு கரம் லம்பிதமாகக் கொண்டு விளங்கும் பான்மையில் அமைந்தது. போருக்குரிய வில், வேல், சக்கரம், தண்டு எனவையுமின்றி இருப்பது சிந்திப்பதற்குரியது. ஏனெனில், போர் முடிவில் காணுகின்ற வெற்றித் திருக்கோலந்தான் இது. இத் தோற்றத்திலே வெற்றியின் களிப்போடு கூடிய ஒரு அமைதி காணப்படும். முயற்சியும், ஆண்மையும், நீதியும் நிலவும் இடத்திலே வெற்றித் திருமகள் வீற்றிருப்பாள். வீரர்களின் மார்பும், புயங்களும், தொழிலாளர்களின் கரங்களும் இல்லக்கிழத்தியரின் வதனமும், புன்முறுவலும் அவளுக்குச் சிறந்த கமலாசனமாகும். இதற்கு மாருக, சோம்பலுள்ளவர்களையும் நீதியற்றவர்களையும் முதுகுகாட்டி ஓடும் ஆண்மையற்றவர்களையும் விட்டு அவள் அகன்றுவிடுவாள்.

தோரணப் பந்தரிலும் பசுந்
 தொழுவிலும் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும் உடல்
 வெயர்த்திட உழைப்பவர் தொழில்களிலும்
பொன்னிலும் மணிகளிலும் நறும்
 பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் செழுங்
 காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் மன்னர்
 முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளாம்.

எனவே, நாம் உதாசீனம் செய்து தள்ளினாலன்றி அவள் நம்மை விட்டு அகன்று விடமாட்டாள். நமக்கு வெற்றி கிட்டவில்லையென்றால் அது நமது தவறேயன்றி வேறில்லை. மூத்தவற் குரித்தரசெனும் முறைமையை மாசுறச் செய்த கைகேயியின் நிலையை விளக்க வந்த கம்பர் அயோத்தியாபுரியிலிருந்து திருமகள் நீங்கப் போவதால் அந்த இடத்தை மூதேவி வந்து நிரப்புவதற்கு வந்து கிடந்தமையை ஒப்ப கைகேயி தன்னை அலங்கோலம் செய்துகொண்டு கிடந்தனள் என வர்ணிக்கிறார். எனவே எமது மங்களச் செயல்களாலும் வந்தனைகளாலும் பூசனைகளாலுமே திருமகள் நமக்குக் கடாட்சமளிக்கிறாள் என்பதை நினைவிலிருத்தக் கடவோம்.

வெற்றிதரும் விஜயலட்சுமியைக் "கொற்றவை" என்று தமிழ் நூல்கள் கூறும். கொற்றம் என்பது வெற்றி.

''வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ'' என்று முருகப்பெருமானைப் போற்றுகிருர் நக்கீரர். புறப்பொருள் வெண்பாமாலையில் ''கொற்றவை நிலை'' என்று குறிப்பிடப்படுவதும் கவனிக்கத்தக்கது.

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலை
கூளி மலிபடைக் கொற்றவை — மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்"

போர் தொடங்கும் காலத்தில் அரசனுக்கு முன்னே தான் சென்று வெற்றியை ஈட்டிக் கொடுக்கும் தன்மையை இப்பாடல் காட்டுகிறது.

பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் புணர்ப்பவனுகிய இறைவன் தனது அருளாற்றலாகிய சக்தியைத் தாங்கியுள்ளான். அந்தச் சக்தியின் அம்சமாக விளங்குபவள் மகாலட்சுமி. மகாலட்சுமியின் அம்சமாக விளங்குபவள் விஜயலட்சுமி. வெற்றிதரும் வாழ்வே இதுபோழ்து நமக்கு வேண்டற்பாலது. ஆகவே விஜயலட்சுமியைப் போற்றிப் பூசித்து உய்தியடைவோமாக.

உ
சிவமயம்

# திருமகளின் திருவருள் அல்லது லக்ஷ்மி கடாக்ஷம்

கு. பாலசுந்தரக் குருக்கள், B. A. (Hons.)

லக்ஷ்மி என்னும் சொல் ''லக்ஷ'' என்னும் வினையடியிலிருந்து பிறந்தது. ''லக்ஷயதி'' உத்யோகினம் பஸ்யதி இதி. லக்ஷ்மி என்பது சொல்லின் பொருள். அதாவது முயற்சியுடையவன் யாவனோ அவனைப் பார்ப்பவள் என்பது கருத்து. முயற்சி திருவினையாக்கும் என்பதும் நோக்குக. இலக்ஷ்மி, பத்மாலயா, பத்மா, கமலா, ஸ்ரீ: ஹரிப்ரியா, இந்திரா, லோகமாதா, மா, க்ஷிராப்தி தனயா, ரமா என்பன அவளுக்குரிய பரியாய நாமங்களுட் சில.

இத்தகைய திருமகளின் அருள் பெற விரும்பாதவர் இவ்வுலகில் எவருமிலர். திருமகள் செல்வத்துக்கும் அழகுக்கும் அபிமான தேவதை. இவளது கடாக்ஷத்தைப் பெற்றவர்கள் மற்றையோரிலும் பல்வேறு விதங்களிலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவது கண்கூடு. ஆனல் பெருஞ் செல்வம் படைத்தவர்களும் சிறந்த அழகு வாய்ந்தவர்களும் மட்டுமே இலட்சுமி கடாட்சத்துக்குரியர் என அறுதியிடுவதோ, ஏனையோர் அதைப் பெற உரிமையற்றவர் என்று நினைப்பதோ சரியன்று. பெரும் தனவந்தர்களும் காலப்போக்கில் சீர்குலைந்து, திருவற்றுப்போவதும், சாதாரணமாயிருந்தவர்கள் திடீரென அதிசயிக்கத்தக்க வகையில் செல்வமும் சீரும் படைத்தவர்களாகத் திகழ்வதும் கண்கூடு. இவ்வுண்மையைச் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தம் பாடல்களில் பலவாறு கூறிப் போந்துள்ளனர். உண்மையைக் கூறின் செல்வம், அழகு என்பவற்றில் இன்று சிறந்திருப்பவர்கள் போல் ஏனையோரும் சீரும் சிறப்பும் பெற்று வாழும் உரிமை, வசதிகள் பெற்றவர்களேயாவர். காண்பதற்கினிய தோற்றமும், கவர்ச்சிகரமான தன்மையும், மனதுக்கினிய சுத்தமும் இருக்குமிடங்களில் எல்லாம், ஸ்ரீதேவியானவள் நித்திய சாந்நித்தியமாயிருப்பள்.

தன் உடல், துணிமணிகள், வீடு வாயில்கள் என்பவற்றைச் சுத்தமாய் வைத்திருப்பதும் மனச் சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் வாழ்வதும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. இவ்விதம் இருப்பவர்களையே சீரும் சிறப்பும் வந்தடைகின்றன. சதா சிடுமூஞ்சியுடன் உற்சாகமிழந்து நிற்பவனை விட்டு விரைவில் லக்ஷ்மி நீங்குவள். ஆதலின் நாம் முதலில் லக்ஷ்மி கடாக்ஷத்தைப் பெறவேண்டும். பின்னர் அதைப் பேணிக் காத்தல் வேண்டும். இவற்றை மேற்கொள்ள வேண்டிய முறைகள் புராணங்களில் நிரம்ப உள்ளன. நமது முன்னோர்களால் சிரத்தையுடன் பேணப்பட்டு வந்த இவற்றுட் பல இன்னும் கைக்கொள்ளப்படுகின்றனவேனும், பல சிரத்தைக் குறைவினலும், பிறருடைய துர்ப்போதனைகளாலும் புறக்கணிக்கப்படுகின்றன.

இக்காலத்திலே "திருமகள் எங்கும் நிலேத்திராள்" என்றும், "செல்வம் சகடக்கால் போல வரும்" என்றும் குறைகூறுவது சகஜமாகி விட்டது. திருமகளின் திருவருளேப் பெறுவது எப்படி? அதைத் தளரவிடாது பேணுவது எப்படி? அதற்கு வேண்டிய நடத்தைகள், குணங்கள், பொருள்கள் எவை? என்பனவற்றை நாம் ஞாபகத்தில் வைப்பதில்லே.

இவ்வுண்மைகள் புராண காலங்களில் மிகச் சிறப்பாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பிரமவைவர்த்த புராணம், விஷ்ணு புராணம், இலிங்க புராணம் என்பனவும் கல்பங்களும் ஸ்ரீ சூக்தங்கள் போன்றனவும் விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டியவை.

மகாவிஷ்ணுவே இலக்குமியைப் பார்த்து "திருமகள் திருவருள் பெறுவது எப்படி?" என்று கேட்பதும் அவள் எங்கு நிலேத்திருப்பாள் என்று விளக்கும் பகுதிகள் சில ; வேறு சில அலக்ஷ்மியை விவாகம் செய்தவராகிய துஸ்ஸஹமுனிவர் அவளுடன் வாழமுடியாது இன்னல்களே அனுபவித்த வரலாற்றைக் கூறும். அலக்ஷ்மி ஆவாள் இலக்குமிக்கு மூத்தவள். தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்திலே முதலில் ஆலகாலவிடந் தோன்றியது. அதன் பின் அமுதம் தோன்றுமுன்பு இவள் தோன்றினுள். அதனுல் இவள் மூத்தவள் அல்லது பெரியம்மை எனப்பட்டாள். இவளுக்கு ஜேஷ்டாதேவி என்று பெயர். "சேட்டை இந்திரைக்கு மூத்தாள்" என்பதுங் காண்க. அதன்பின் திருமகள் தோன்றினுள். அவள் மகாவிஷ்ணுவை மணுளனுக வரித்தாள். அதனுல் அவள் இளேயாள் எனப்பட்டாள்.

மூத்தவளாகிய அலக்ஷ்மியை துஸ்ஸஹ முனிவர் மணந்துகொண்டு இல்லறம் நடத்துபவராய் லோகசஞ்சாரம் செய்யலானுர். அவருடைய மனேவியரோவெனில் பரமசிவன், மகாவிஷ்ணு இவர்கள் திருநாமங்கள் கோஷிக்கப்படு மிடம், வேதங்கள் ஓதப்படுமிடம், ஓமப்புகை கிளம்புமிடம், திருநீறு, திருமலர் முதலியவற்றைத் தரித்தவர்கள் வாழுமிடம் என்பவற்றை அணுகுங்கால் பயந்து நடுநடுங்கி இருகாதுகளேயும் மூடிக்கொண்டு மிகவேகமாக அவ்விடங்களே விட்டகன்று ஓடத்தொடங்கினுள்.

தன் மனேவியின் இவ் விசித்திரமான செயலேக் கண்ட அம் முனிவர் மனங்கலங்கி அவளுடன் காடு போந்து தவத்தில் இறங்கினுர். கடும் தபத்தில் ஈடுபட்டிருந்தவராய்த் தன் மனேவியை இனி ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்வதில்லே என உறுதி பூண்டு புலன்களே அடக்கி யோகத்தில் ஆழ்ந்தார். தற்செயலாய் அங்கு வந்த மார்க்கண்டேய மகரிஷியைக் கண்டு முறைப்படி வணங்கி தம் நிலேயை எடுத்துரைத்தார். துஸ்ஸஹ முனிவர் மார்க்கண்டேய முனிவரிடம் பின்வருமாறு வினவினுர் :

"பகவானே! என் மனேவி என்னுடன் சிறிதும் ஒற்றுமையுடன் வாழ்கின்றுளில்லே. நான் யாது செய்யலாம்? இவளுடன் நான் எந்த இடத்திற் புகலாம்? எந்த இடத்திற் பிரவேசிக்கக்கூடாது? தயைகூர்ந்து இவற்றை எனக்கு அருளிச் செய்க."

மார்க்கண்டேயரும் அவர் நிலைக்கு இரங்கினுர். அவரைப் பார்த்துப் பின்வருமாறு உபதேசம் செய்தார்:

''துஸ்ஸஹ முனிவரே கேளும். உமது மனையாளாகிய மூத்தாள் அகீர்த்தி, அதுலா (இளையற்றவள்), அலட்சுமி என்னும் பெயர்களையுடையவள். அவளுடன் நீர் பிரவேசிக்கத் தகாத இடங்கள் வருமாறு:

1. எந்த இடத்தில் வாழும் ஜனங்கள் எக்காலமும் திருமாலைத் தொழுபவர்களோ வேதநெறி கடைப்பிடிப்பவர்களோ; எந்த இடத்தில் ஜனங்கள் சிவபிரானிடம் பக்தி செய்யும் மஹாத்மாக்களோ திருநீறு பரவப் பூசிய திருமேனியை யுடையவர்களோ அங்கெல்லாம் இம்மூத்தாளுடன் நீர் எக் காரணங் கொண்டும் நுழையக்கூடாது.

2. எங்கெல்லாம் '' நாராயணு, மாதவா, அச்யுதா, அநந்தா, கோவிந்தா, வாசுதேவா, ஜனுர்த்தனு என்றும்; எப்பொழுதும் ருத்ரா, ருத்ரா என்றும்; சிவாய நம என்றும்; சிவதராய நம என்றும்; சங்கராயநம என்றும்; எப்பொழுதும் மஹாதேவா, மஹாதேவா, மஹாதேவா என்றும்: உமாபதயேநம என்றும்; ஹிரண்யபதயே நம என்றும்; ஹிரண்யபாஹுவான உமக்கு வணக்கம் என்றும்; எருதுக் கொடியோனுக்கு வணக்கம் என்றும்; அன்னபிறவா றெல்லாம் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும் மற்றவர்களும் தினந்தோறும் அனவரதமும் சந்தோஷமடைந்தவர்களாய்த் துதிப்பார்களோ அவர்களுடைய செல்வம், வீடு முதலியவற்றிலும், பூங்காவனங்களிலும், மாட்டுத் தொழுவங்களிலும் நீர் பிரவேசிக்கக் கூடாது''.

எந்த வீட்டில் ''ஸ்வாஹா'' என்னும் கோஷங்களும் ''வஷட்'' என்னும் கோஷமும் உளவோ (இவை தேவர்களை உத்தேசித்துச் செய்யும் ஓமங்கள்) அதை விட்டு வேறு இடத்துக்குச் செல்லுவீராக.

எந்த இடத்தில் எக்காலமும் வேதமோதுவதையே முக்கியமாகக் கொண்டவர்களும், நித்திய கர்மங்களைச் சிரத்தையுடன் செய்து வருபவர்களும், பெருமானைப் பூசிப்பவர்களும் இருக்கிருர்களோ அவ்விடங்களை விலக்கல் வேண்டும்.

துஸ்ஸஹ முனிவரே! நித்தியமாகவும் நைமித்தியமாகவும் இருக்கிற யாகங்களினுல் எவர்கள் இறைவனை வழிபடுகின்றனரோ அவர்களை விட்டு வேறிடம் செல்வீராக.

வேதங்களை நன்ருகக் கற்றுணர்ந்த அந்தணர்களும், ஆசிரியர்களும். அதிதிகளும், சிவனடியார்களும் எவர்களால் தினந்தோறும் பூசிக்கப்படுகிருர்களோ அவர்களை விட்டு விலகிவிடவேண்டும்.

அலக்ஷ்மியுடன் பிரவேசிக்கக்கூடிய இடங்கள் சில

1. எங்கு தேவர்களுக்குத் தேவனுகிய ஸ்ரீ ருத்ரன் நிந்திக்கப்படுகின்ருரோ அங்கு நீர் இவளுடன் பிரவேசிக்கலாம்.

2. எங்கு பெருமாள் பக்தி ஜெபம் ஹோமம் சதாசிவன் என்பன இல்லையோ அங்கு தடையின்றிப் பிரவேசிக்கலாம்.

எந்த வீட்டில் சந்தியா காலங்களில் மக்கள் திருநீறின்றி இருக்கின்றார்களோ, எங்கு வேதவொலி இல்லையோ, குருபூசை முதலியனவும் இல்லையோ அங்கு நீர் மனைவியுடன் பிரவேசிக்கலாம்.

எங்கு பித்ருக்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை விட்டவர்கள், அறிவில்லாதவர்கள், கெட்ட எண்ணங்களை உடையவர்கள் உளரோ அங்கே நீர் அச்சமின்றிப் பிரவேசிக்கலாம்.

அமிதமான உணவு உட்கொள்ளும் மனிதர்கள், அதிகமாகக் குடிக்கும் மனிதர்கள், சூதாட்டம் வழக்கு முதலிய செயல்களில் இழிந்து அறிவிழந்தவர்கள் என்பவர்கள் வீட்டில் நீர் பிரவேசிக்கலாம்.

உடனே துஸ்ஸஹ முனிவர் அவர் குறிப்பிட்ட இடங்களை அடைந்து வசித்துவந்தார். அவர் தமது மனைவியாகிய மூத்தவளைப் பார்த்து, ''நீ இங்கேயே இரு. நான் பாதாள உலகம் சென்று நமக்கேற்ற இருப்பிடம் தேடிப் பார்த்து வருகிறேன்'' என்றார். அதற்கு அவள் ''எனக்கு உணவு யார் கொடுப்பார்கள்'' என்று வினவினாள். அதற்கு முனிவர் ''பெண்கள் யாவரும் – நீ அவர்களிடம் நெருங்காமல் விலகி இருத்தற்பொருட்டு பல விதமான பலி உணவுகளாலும் புஷ்பங்கள் தூபதீபங்களாலும் பூசனை செய்வர். அவற்றை ஏற்று வாழுதி'' என்று கூறி மறைந்தார்.

இலிங்க மஹா புராணத்தில் இலக்ஷ்மி வரலாற்றைப்பற்றிக் கூறியவற்றுள் மிகச் சிலவே இவை. விரிவஞ்சிச் சுருக்கிக் கூறினோம்.

பிரும்ம வைவர்த்த புராணத்தில் இன்னின்னார் வீட்டில் நான் வசிப்பேன் எனவும் இன்னின்னார் வீட்டில் நான் ஒருபொழுதும் வசியேன் எனவும் இலக்குமி கூறிய சில பகுதிகள் உள. அவற்றிற் சில பாரதிய வித்யா பவன் சஞ்சிகையிற் காலந்தோறும் வெளிவருகின்றன. விரிக்கிற் பெருகும்.

புராணேதிகாசங்களின் உட்கருத்தையும் நோக்கங்களையும் உணராத இக் கலியுகத்தில் இத்தகைய சிலவற்றைப் பத்தர்களுக்கு எடுத்துக் காட்டுவது முக்கியம்.

இன்னும் அட்டலக்குமிகளைப் பற்றியும் அவற்றின் கடாட்சத்தை மக்கள் நாடவேண்டியதன் அவசியத்தையும் நாம் உணர்ந்து அவளின் பல்வேறு மூர்த்தங்களையும் உபாசித்து எல்லாவற்றையும் ஒருங்கு தன்னுளடக்கி அருள் பாலிக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் சக்தியாகிய நகுலாம்பிகையின் கிருபா கடாட்சம் பெற்று இஷ்டசித்திகளைப் பெற்று வாழ்வோமாக.

சுபம்!

EVELYN RUTNAM INSTITUTE
215
REFERENCE
LIBRARY

சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களால் வெளியிடப்பட்டது. உ83-4/69